R 4223 (page 246) [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்
# A FRIEND IN NEED A FRIEND INDEED

[R4224 : page 248]

யோனத்தான் மற்றும் இவரது அன்பு பற்றின தாவீதின் புரிந்துகொள்ளுதல் குறித்த ஒரு பார்வையினை, "வில்லின் பாடல்" என்று அழைக்கப்படுகின்ற பாடலில் பார்க்கலாம்; இப்பாடலானது தாவீதின் நண்பனாகிய யோனத்தானுடைய மரணத்தின் நிமித்தமான தாவீதின் புலம்பலாகும். "என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது" (2 சாமுயேல் 1:26). ஆனால் அன்புக்குரிய நண்பர்களே, இதைவிட இன்னும் அருமையானதொரு அன்பினை நாம் அறிவோம்; மேலும் அந்த அன்பைக்குறித்து நாம் சில சமயங்களில் பின்வருமாறு பாடுவோம்:

"தெய்வீகமான இயேசுவின் அன்பு,<br>எந்தன் ஏக்கமுள்ள இருதயம்தனை நிரப்புவதாக."

அன்பு, அன்பினை உருவாக்குகின்றது; ஆகையாலே நாம் முதலாவது தேவனை அன்பு கூறவில்லை என்றும், அவரே நம்மை முந்தி அன்புகூர்ந்து, தம்முடைய குமாரனைக் கொடுத்ததன் மூலம், நமக்கான தம்முடைய அன்பினை வெளிப்படுத்தினார் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆகையால் இயேசுவின் அன்பே நம்மைக் கவர்ந்து இழுத்தது, இன்னுமாக நம்முடைய பிரதி அன்பினையும் கொணர்ந்தது. நாம் நாளுக்குநாள், எல்லாப் புத்திக்கும் மேலான தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பிற்கான நீளத்தையும், ஆழத்தையும், உயரத்தையும், அகலத்தையும் அதிகமதிகமாய் உணர வருகையில், இவர்கள் மீதான நமது அன்பும் பொங்கிவழியும். மேலும் இவ்வன்பு அதிகரிக்கையில், நாமும்கூடத் தேவனுக்கொத்த சாயலாகுவோம்; மேலும் இதற்கேற்ப நம்மிடமிருந்தும், நம்மை அன்புகூராத மற்றவர்கள்மீதும் அன்பு கடந்துசெல்லும்; மற்றவர்களுக்கான நம்முடைய இந்த அன்பானது, மற்றவர்களிலும் பிரதி அன்பினை உருவாக்கும்; மேலும் உலக ஆவிக்கும், உலக சிநேகத்துக்கும், உலக சுயநலத்துக்கும் எதிராய்க் காணப்படும் (மேலே குறிப்பிடப்பட்டுள்ள) இந்த ஒரு கொள்கையினைக்குறித்த அதிகப்படியான புரிந்துகொள்ளுதலுக்குள் மற்றவர்களையும் வழிநடத்தும். ஆகையால் தேவனுக்கு ஒத்த இந்தப் பண்பினை வளர்த்துக்கொள்ள நாடுவோமாக. அன்பு உலகத்தில் பிரதானமானது மாத்திரமல்லாமல், அது தெய்வீகக் குணலட்சணத்தின் முக்கிய சாராம்சமாகவும், இந்த அன்பென்னும் ஒரே வார்த்தையில், அதன் நிறைவேறுதலைப் பெற்றிருக்கும் தெய்வீகப் பிரமாணத்தின் முக்கிய சாராம்சமாகவும் காணப்படுகின்றது என்றும்கூட வேதவாக்கியங்கள் சுட்டிக்காண்பிப்பதை நாம் கவனிப்போமாக. ஆகையால் இப்பண்பினை நாம் அப்பியாசப்படுத்தும்போது, நாம் அழைக்கப்பட்டிருக்கின்றதும், நமது கர்த்தருடைய கிருபையினால் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதன் மூலம் நாம் அடைய நாடுகின்றதுமான மகிமையான வாய்ப்புகளுக்காக, நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ளுகின்றவர்களாகக் காணப்படுவோம் என்பதையும் நினைவில் கொள்வோமாக.

## வில்லின் பாட்டு

இஸ்ரயேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று;
பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள்.
பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும்,
விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும்,
அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும்,
அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்.
கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும்,
காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக;
அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது;
சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர்போல
அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே.
கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும்,
பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும்,
யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை;
சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை.
உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்;
மரணத்திலும் பிரிந்துபோனதில்லை;
கழுகுகளைப்பார்க்கிலும் வேகமும்,
சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.
இஸ்ரயேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து,
உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த
சவுலுக்காக அழுது புலம்புங்கள்.
போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே;
யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே.
என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்;
நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்;
உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது;
ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது.
பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்களே;
யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே.

- 2 சாமுயேல் 1: 17-27 ISV